සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

## மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023 (2024)
## Third Term Test - Grade 09 - 2023 (2024)

## வரலாறு

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

### பகுதி I

- எல்வா வினாக்களுக்கும் விடையளிக்க.
- 1 - 5 வரையான வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.

01. இந்து சமுத்திரத்தில் தமது வர்த்தக ஆதிக்கத்தை நிலை நாட்டிச் செல்லும் போது ஒல்லாந்தர் எதிர்கொண்ட மற்றுமொரு ஐரோப்பிய இனத்தவர் யார்?
    i. போர்த்துக்கேயர் ii. ஆங்கிலேயர் iii. இஸ்லாமியர் iv. இந்தியர்

02. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் பிரித்தானிய ஆளுநராகக் கடமையாற்றியவர் யார்?
    i. பிரடரிக் நோர்த் ii. ரொரிங்டன் பிரபு
    iii. தோமஸ் மெயிட்லன்ட் iv. ரொபர்ட் பிரவுண்றிக்

03. போர்த்துக்கேயரின் கீழைத்தேய வர்த்தக மத்திய நிலையமாக தெரிவு செய்து கொண்ட பிரதேசம் யாது?
    i. சூறத் ii. பாண்டிச்சேரி iii. பத்தேவியா iv. கோவா

04. கி.பி 1848 இரண்டாம் சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு காரணமாய் இருந்தவர்கள் யார்?
    i. படைவீரர்கள் ii. பொது மக்கள் iii. பிக்குகள் iv. ஆங்கிலேயர்

05. தேசிய கலாசாரத்தை மேம்படுத்தும் நோக்கமாகச் செயற்பட்ட T.P. ஜயதிலக அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை யாது?
    i. வரலாற்று நிகழ்வுகளை உட்படுத்தி நூல்கள் எழுதியமை.
    ii. நாவல்கள் எழுதுவதன் மூலம் கலாசாரத்தை மேம்படுத்தியமை
    iii. அநுராதபுரத்தில் பௌத்த வழிபாட்டு இடங்களைப் பாதுகாக்கும் இயக்கமொன்றை ஆரம்பித்தமை.
    iv. கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை.

- 6 - 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் முன்னால் உள்ள அடைப்பினுள் இடுக.

06. பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்கள் இந்நாட்டில் சட்டவாக்க கழகத்திற்கு முதன்முதலில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாவார். ( )

07. இந்திய கிளர்ச்சியாளர் C.R. தாஸ் என்பவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் வங்காளத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இதற்கு எதிராக கோசம் எழுப்பினர். ( )

08. கி.பி 1978 யாப்புச் சீர்திருத்தத்திற்கேற்ப அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளை நியமித்தல் ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களில் ஒன்றாகும். ( )

09. அரசுக்கழகம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இந்நாட்டில் விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ( )

10. கி.பி 1959 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது கைத்தொழில் பேட்டை உருவாக்கப்பட்டது. ( )

- **11 - 15 வரையான வினாக்களுக்கு மிகச்சரியான விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

11. முதலாம் விமலதர்ம சூரிய மன்னனின் முன்னிலையில் மரியாதையின்றி பேசிய ஒல்லாந்த ஆளுநர் ........................................ அரசனது குழுக்களுடன் மோதல் ஏற்பட்டு துரதிஷ்டவசமாக இறந்தான்.
12. போர்த்துக்கேயர் காலந்தொட்டு கறுவா சேகரித்தல், விற்றல் தொடர்பாக செயற்பட்ட .............................. திணைக்களம் ஒல்லாந்தரால் தனிப்பட்ட ஒருவரின் கீழ் கொண்டுவரப்பட்டு மிகத்திறமையுடன் செயற்படுத்தப்பட்டது.
13. வளவை கங்கை, உடுகிரி வளவை அண்டிய பகுதிகளின் நீர்ப்பாசன அமைப்புக்களை புனரமைப்பதற்கு ஆளுநர் ....................................... நியமிக்கப்பட்டார்.
14. முழு இந்தியாவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்திய தேசிய சங்கத்தை தோற்றுவித்தவர் ........................................ ஆவார்.
15. 1931 ஆம் ஆண்டு பிரித்தானியரால் அறிமுகம் செய்யப்பட்ட ...................................... யாப்புச் சீர்த்திருத்தத்தின் விளைவாக இலங்கை மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.
(மகாபத்தே, சோல்பறி, ஆதர் ஹோடன், மடிகே பத்த, டொனமூர், அலன் ஒக்டேவியன் ஹியும்)


- **16 - 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்கு உரிய விடைகளை எழுதிப் பூரணப்படுத்துக.**

16. கி.பி 1877 ஆம் ஆண்டு பேராதனை மற்றும் ......................................... பூங்காக்களில் இறப்பர் செய்கை முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டது.
17. கண்டி ஒப்பந்தத்தின் இரண்டாவது உருப்புரையில் ....................................... மன்னன் அரியணையிலிருந்து அகற்றப்பட்டதாகவும் அவனுடைய அனைத்து உறவினர்களும் கண்டி அரியணை மீதான சகல உரிமைகளிலிருந்தும் நீக்கப்பட்டதாகவும் காட்டப்பட்டுள்ளது.
18. இந்து சமய மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை பெற்றுக்கொடுக்க ஆறுமுக நாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ......................................... எனும் பாடசாலையை ஆரம்பித்தார்.
19. ஆங்கிலேயர்களின் பொருளாதார கொள்கை காரணமாக இந்தியா நாளுக்கு நாள் வறிய நாடாக மாறிவரும் விதத்தை ஆரம்பத்தில் தெளிவுப்படுத்திய தலைவர் ....................................... ஆவார்.
20. சோல்பறி அரசியல் யாப்பிற்கமைய சட்டத்துறை சார் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனம் ......................................... என அழைக்கப்பட்டது.

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயம்.**
- **முதலாம் வினா உட்பட மேலும் 4 வினாக்களுக்கு விடையளிக்க.**




(அ) i. அருகிலுள்ள இலங்கைப்படத்தில் இரண்டாவது சுதந்திரப்போராட்டம் இடம்பெற்ற பிரதேசம் A எனும் எழுத்தில் காட்டப்பட்டுள்ளது. அப்பிரதேசத்தைக் குறிப்பிடுக.


ii. ஆளுநர் வில்லியம் கிரகரி அவர்களால் புணரமைக்கப்பட்ட கலாவாவியை காட்டும் ஆங்கில எழுத்து யாது?

(04 புள்ளிகள்)

(ஆ) i. வாஸ்கோடகாமா இந்தியாவில் தரையிறங்கிய கள்ளிக் கோட்டை எந்த எழுத்தால் காட்டப்பட்டுள்ளது?

ii. முஹம்மது அலி ஜின்னா தலைமையில் முஸ்லிம் லீக் இயக்கத்தின் மூலம் உருவாக்கிக் கொண்ட பாகிஸ்தான் நாடு எந்த எழுத்தால் காட்டப்பட்டுள்ளது?

(04 புள்ளிகள்)




(இ) i. A எனும் உருவில் காட்டப்பட்டுள்ள மன்னன் யார்?

ii. இவர் ஆட்சி செய்த இராச்சியம் எது?

iii. இவரை சந்திக்க வந்த ஒல்லாந்த தூதுவன் யார்?

iv. இவர் ஒல்லாந்தருடன் கடிதங்கள் எழுதும் போது ஒல்லாந்தர் மன்னனை அழைக்கப்பயன்படுத்திய சிறப்புப் பெயர் யாது?

(04 புள்ளிகள்)



A


(ஈ) i. B எனும் உருவிலுள்ள நபர் யார்?

ii. இவர் 1956 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சி யாது?

iii. இவரின் மரணத்தின் பின் பிரதமர் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டவர் யார்?

iv. இவரின் மரணத்தின் பின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பதவி வகித்தவர் யார்?

(04 புள்ளிகள்)



B

02. i. கண்டி இராச்சியத்தில் அதிகாரத்தை பெற்ற நாயக்க வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளர் இருவரை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. நெல், பிடவை என்பவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் வர்த்தக சங்கத்திற்கு செலவாகும் பணத்தை குறைப்பதற்கு ஒல்லாந்தர் மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டு தருக. (04 பு.)

iii. ஒல்லாந்தர் இலங்கையில் நிறுவிய இரண்டு வகையான பாடசாலைகளை குறிப்பிட்டு, அவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கல்வி நடவடிக்கைகளையும் பற்றி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

03. i. கண்டி இராச்சிய மன்னன் ராஜாத்தி ராஜசிங்கனை சந்தித்த ஆங்கிலேய தூதுவர்கள் இருவரின் பெயரை தருக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

A. கி.பி 1818 சுதந்திரக் கிளர்ச்சியில் தும்பர, தும்பனைப் பிரதேசங்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கிய படைத்தளபதி

B. இரண்டாம் சுதந்திரப் போராட்டத்தின் தலைவர் கொங்காலேகொடபண்டா தம்புள்ளையில் முடி சூடிக் கொண்ட பெயர்

C. இலங்கையில் கோப்பி பயிர் அழிவுற்றமைக்கு காரணமான பங்கசு நோய்

D. இலங்கையில் முதலாவது தேயிலை தோட்டத்தை ஆரம்பித்த நபர் (04 புள்ளிகள்)

iii. தேயிலை செய்கை இந்நாட்டின் முக்கியமான பொருளாதாரப் பயிராக மாற்றமடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

04. i. 19 ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இலங்கைக்கு வந்த மிஷனரி அமைப்புக்கள் இரண்டினை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

A - பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனாவை ஆரம்பித்தவர் யார்?

B - பாணந்துரை விவாதம் தொடர்பான சிறு நூல் ஒன்றை படித்ததன் மூலம் பௌத்த சமயம் தொடர்பாக விளக்கம் பெற்ற ஹென்றி ஸ்டில் ஒல்கொட் அவர்களுடன் இலங்கை வந்த பெண் யார்?

C - பரமேஸ்வரா கல்லூரியை நிறுவி இந்து சமய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பாடுபட்ட நபர் யார்?

D - கொழும்பு சாஹிரா கல்லூரியின் அதிபராகவும் இலங்கையின் சட்டவாக்கக்கழக உறுப்பினராகவும் பணியாற்றிய இஸ்லாம் சமய மறுமலர்ச்சிக்கு போராடிய நபர் யார்? (04 புள்ளிகள்)

iii. 19 ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியாகும் போது இந்நாட்டு மக்களிடையே சமய எழுச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினை சுருக்கமாக தருக.

(05 புள்ளிகள்)

05. i. இந்தியாவுக்கு நியமனம் பெற்று வந்த ஆங்கிலேய ஆளுநர்கள் யுத்தங்கள் மூலமாகவும் வேறு தந்திரோபாயங்கள் மூலமாகவும் இந்தியாவில் தமது ஆதிக்கத்தை பரப்ப நடவடிக்கை எடுத்தனர். அவ்வாறான தந்திரோபாயங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

ii. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

A - இந்திய தேசிய சங்கத்தில் காணப்பட்ட மிதவாதிகள் இருவரை பெயரிடுக.

B - இந்து சமயத்தவர் மத்தியில் சமய கலாச்சார எழுச்சி ஏற்பட ராம் மோகன் ரோய் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம் எது?

C - இந்தியாவின் இறுதி பிரித்தானிய ஆளுநர் யார்? (04 புள்ளிகள்)

iii. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஜூலியன் வாலா பாக் படுகொலை மற்றும் தண்டி யாத்திரை ஆகிய நிகழ்வுகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

06. i. தற்பொழுது இலங்கையிலுள்ள மாகாணங்களுள் பிரிக்கப்பட்டிருந்த இரண்டு மாகாணங்களை குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

ii. கோல்புறூக் சீர்திருத்தங்களின் விசேட பண்புகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

iii. டொனமூர் அரசியல் யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக.


(05 புள்ளிகள்)

(5) WWW.PastPapers.WiKi (4)



Download Term Test Papers, Short Notes From One Place!

07. பின்வரும் படத்திலுள்ள உருக்களை அவதானித்து கீழுள்ள அட்டவணையில் காணப்படும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்தை எழுதிப் பூரணப்படுத்துக.




| **வினாக்கள்** | **விடைகள்** | **விடைகளுக்குரிய எழுத்து** |
|---|---|---|
| சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் | 1. ............................................ | 2. ................................................... |
| ஹர்த்தாலின் விளைவாக பதவி விலகியவர் | 3. ............................................ | 4. ............................................... |
| ஐக்கிய நாடுகள் சபையில் எமது நாடு அங்கத்துவம் பெற்ற சமயத்தில் இலங்கையின் பிரதமர் | 5. ............................................ | G |
| 1972 ஆம் ஆண்டு முதலாவது அரசியல் யாப்பின் கீழ் நிறுவப்பட்ட உயர் நீதிமன்றம் | உச்ச நீதிமன்றம் | 6. ................................................... |
| 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறைகள் நிறுவனம் | 7. ............................................ | 8. ................................................... |
| இலங்கையின் முதலாவது ஜனாதிபதி | 9. ............................................ | E |
| இலங்கையில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் | 10. ......................................... | 11. ................................................... |

(11 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



(5) WWW.PastPapers.WiKi (5)
Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2023
Third Term Test - Grade 09 - 2023

# வரலாறு

விடைப்பத்திரம்

## பகுதி I

1. போர்த்துக்கேயர்
2. ரொபர்ட் பிரவுண்றிக்
3. கோவா
4. பொதுமக்கள்
5. iv
6. ×
7. ✓
8. ✓
9. ✓
10. ✓
11. சி பெல் த வோட்
12. மகாபத்த
13. ஆதர் ஹோடன்
14. அலன் ஒக்டவியன் ஹியும்
15. டொனமூர்
16. சென்ரத் கொட
17. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன்
18. சிவன்கல
19. தாதாபாய் நவரோஜி
20. பாராளுமன்றம்

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01. (அ)
    i. மாத்தளை
    ii. C

    (ஆ)
    i. A
    ii. B

    (இ)
    i. A - இரண்டாம் ராஜசிங்கன்
    ii. கண்டி
    iii. ஜெராட் ஹல்பட்
    iv. தங்களது பணிவுள்ள சேவையாளர்

    (ஈ)
    i. பண்டார நாயக்கா அவர்கள்
    ii. இலங்கை சுதந்திரக்கட்சி
    iii. விஜயானந்த தஹநாயக்க
    iv. சிறிமாவோ பண்டார நாயக்க

02. i. ஸ்ரீ விஜய ராஜசிங்க
    கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க
    ii. முத்து ராஜவெலயை விளைநிலமாக்க நடவடிக்கை எடுத்தல்
    நெசவுத் தொழில், துணிகளுக்கு சாயமிடல், ஓடு செங்கல் தயாரித்தல் தொழிலை ஊக்குவித்தல்
    ஹமிர்டன் கால்வாயை அமைத்து அவற்றில் பொருட்களை கொண்டு செல்ல பயன்படுத்தல்
    iii. இஸ்கோல், செமனேரி போன்றவற்றை விளக்குதல் (பக்கம் 20)

03. i. ஜோன் பைபஸ் (கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க)
    ஹியு பொயிட் (ராஜாதி ராஜசிங்க)
    ரொபட் அன்றூஸ் (ராஜாதி ராஜசிங்க)
    ii. A - மடுகல்ல B - ஸ்ரீ விக்ரம ராஜசிங்க C - ஹெமிலியா, வெஸ்ட்ர்ரிக்ஸ்
    D - ஜேம்ஸ் டேலர்



(2) WWW.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

iii. மிகவும் பொருத்தமான ஈரவலயம் காணப்படல்
இலங்கைத் தேயிலைக்கு இலண்டனிலும் உலகச் சந்தையிலும் அதிக கேள்வி நிலவியமை
குறைந்த உற்பத்திச் செலவில் கூடிய இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியுமாக இருந்தமை

04. i. லண்டன், பெப்டிஸ்
ii. A - ரத்மலானை ஸ்ரீ தம்மாலோக தேரர்
B - ஹெலேனா பிளவக்ஸி
C - பொன்னம்பலம் ராமநாதன்
D - டி.பி ஜாயா
iii. மிஷனரிமாரின் சமயப் பிரசாரத்தால் தேசிய சமயங்கள் தாக்கப்படல்.
சிங்கள தமிழ் மொழிக்கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்
பிரித்தானியர் ஆட்சியால் தமது சமய, கலாசாரம் அழிவுறும் எனும் உணர்வு மக்களிடையே தோன்றுதல்.

05. i. உதவி ஒப்பந்தங்கள், விடுதலைப்பத்திரங்கள்
ii. A - W.G. பெனர்ஜி, ததாபாய் நவரோஜி
B - பிரம்ம சமாஜம்
C - மவுன் பேட்டன்
iii. 1919 ஏப்ரல் மாதம் அமிர்த் சாகி ஜுலியன்வாலா பாக்கில் கூட்டமொன்றுக்கு வருகை
தந்த ஆயிரக்கணக்கான நிராயுத பாணிகளான இந்தியர்கள் மீது ஆங்கிலப்படை
வீரர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதனால் 400 பேர் வரையில் உயிரிழந்தனர்.
பெருந்தொகையானோர் காயமடைந்தனர். இது ஜுலியன் வாலாபாக் படு கொலை
எனப்பட்டது (பக்கம் 90)

06. i. வடக்கு, தெற்கு
ii. சட்டவாக்கக்கழகம், சட்ட நிருவாகக்கழகம் ஏற்படுத்தப்படல்
கரையோரத்தையும் மலைநாட்டையும் ஒன்றிணைத்தல்
கட்டாய ராஜகாரிய முறையை ஒழித்தல்
ஆங்கிலக் கல்வியை கட்டாயமாக்குதல்
iii. அரசுக்கழகம் தோற்றுவிக்கப்படல்
சர்வஜன வாக்குரிமை வழங்குதல்
நிருவாகக் குழுமுறைமையை ஏற்படுத்தல்

07.
1. டி. எஸ். சேனாநாயக்க (2) C
3. டட்லி சேனாநாயக்க (4) B
5. ஜோன் கொதலாவல G
மீயுயர் நீதிமன்றம் (6) A
7. பாராளுமன்றம் (8) H
9. வில்லியம் கொபல்லாவ E
10. பேராதெனிய (11) D

PAST PAPERS WIKI
(2) WWW.PastPapers.WiKi (2)

Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න